# 1.5 உள்ளடக்கப்பட்டதும் – வெளியேற்றப்பட்டதும்

**இலக்கு**

*தெரிந்தோ, தெரியாமலோ ஒருவர் தம் குழுவில் இருந்து எப்படி வெளியேற்றப்பட்டார் என்பதை மாணவர் ஒரு நடிப்பின் மூலம் அறிந்துகொள்ளமுடியும். இது தொடர்பான உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பதன் மூலமும், எதிரான செயற்பாட்டினைக் காட்டுவதன் மூலமும் சமூகத்திற்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.*

வகுப்பு 4 - 9

60 மணித்துளிகள்

**கருவிகள்:**
ஐந்து அட்டைகள்.
நான்கு ஒரேமாதிரியானவை, ஒன்று வேறுபட்டது. (எ.கா. கீழே பார்க்கவும்)

**குறிப்புகள்:**

- நடிப்பில் பிள்ளைகளுக்கு ஏற்கனவே நடித்த பட்டறிவு இருக்குமானால் இது துணைசெய்வதாயிருக்கும். இன்றியமையாத விதி என்னவெனில் நாடகம் நடிக்கும்போது கருத்துக்கள் கூறமுடியாது, முடிவிலேயே கருத்து கூறமுடியும்.
- சான்று: http://www.fippev.de/t3/fileadmin/fippev/userdaten/PDF/Anti-Bias-Ordner/Diskriminierung_Antibias_in_der_Schule.pdf


---

**நடைமுறை:**

- மாணவருக்கான தகவல்கள்: ஒரு நாடகத்தை நடாத்துவதற்கு, ஐந்து பேர் கொண்ட குழுவில் நாலு பேர் ஒரு கருப்பொருள் பற்றி தீவிரமாக உரையாடலில் ஈடுபட்டுக் கொண்டிருக்க, 5வது ஆள் அதில் தன்னைத் தொடர்புபடுத்திக் கொள்ளவில்லை. (கீழே உள்ள எ.கா.டைப் பார்க்க, மற்றைய எடுத்துக்காட்டுக்கள்: 4 அட்டைகள் "கடற்கரையில் விடுமுறையைக் கழித்தல்" பற்றியும், 1 அட்டை "மலையில் விடுமுறையைக் கழித்தல்" பற்றியும் 4 அட்டைகள் "ஆசிரியருடன் பிரச்சனை" பற்றியும், 1 அட்டை"பாடசாலையின் நல்ல பட்டறிவுகள்" பற்றியும்.
- ஐந்து தன்னார்வலர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு அட்டையைப் பெற்று அதிலுள்ள விடயம் பற்றி உரையாடுவர்.(ஒருவர் தொடர்ச்சியாக தொடர்பில்லாமல் பேசிக்கொண்டு இருக்கிறார் என்பது விரைவில் தெரியவரும்) இந்த ஐந்து கதாபாத்திரங்களும் வகுப்பின் நடுவில் அமர்ந்திருக்க மற்ற மாணவர்கள் அவர்களைச் சுற்றி வட்டமாக அமர்ந்து இருப்பர். இந்த நாடகம் 10 நிமிடம் இடம்பெறலாம். மேலதிக நேரம் கிடைக்குமெனின் வேறொரு தலைப்புடன் இன்னொரு நடிப்பினை செய்யலாம்

---

## அட்டைத் துண்டுகளுக்கான எடுத்துக்காட்டுக்கள்




- தொடர்ந்த நிறைவு உருக்காட்டல் நிகழ்வில் வகுப்பு திறவுக் கேள்விகள் பற்றி உரையாடுவர். அவையாவன:
  - நாடகத்தில் பங்குபற்றியோர் நடிக்கும்போது எவ்வாறு உணர்ந்தார்கள்? இப்போது எப்படி உணர்கின்றனர்?
  - பார்வையாளர்கள் எதனைக் கண்டுகொண்டனர்?
  - பொதுவான வெளியேற்றுவதற்கான காரணங்கள்: இந்த விளையாட்டில் ஏன் வெளியேற்றல் இடம்பெற்றது? நீர் வேறு எவ்வகையான வெளியேற்றும் சூழல்கள் பற்றி அறிந்துள்ளீர்? எப்படி இவ்வாறான வெளியேற்றல்களைத் தவிர்க்க முடியும்?

– முடியுமாயின் எமது சமூகத்தின் பண்பாகிய வெளியேற்றும் சூழல்களின் தொகுதி ஒன்றைத் திரட்டவும்; இந்த சூழல்களை மாற்றுவதற்கான மதிநுட்பங்கள் பற்றிய கலந்துரையாடல்.

# 1.6 தன் அடையாள மூலக்கூறு

**இலக்கு**

*மாணவர் தமது பண்பாட்டு அடையாளத்தை உருக்காட்டி பொதுவானவற்றையும், வேறுபாடுகளையும் தெரிந்து கொள்வர். அவர்கள் தங்களுடைய மாறுபாடான குழு இணைப்புக்களையும், சிறுபான்மையான அல்லது பெரும்பான்மையான குழுக்களுடனான இணைப்பையும் அத்துடன் தொடர்பான பட்டறிவையும் தெரிந்துகொள்வர்.*

வகுப்பு 4 - 9

45 - 90 மணித்துளிகள்



**கருவிகள்:**

அடையாள மூலக்கூறு பணித்தாள் (எடுத்துக்காட்டு வலப்பக்கம் பார்க்கவும்)

**குறிப்புகள்:**

சான்று: "A World of Difference"; Institute Training Manual, ©1994 Anti-Defamation League.

**நடைமுறை:**

- என்ன சிக்கல் என்பதை கிரகித்துக்கொள்ள "எனது தனியாள் அடையாள மூலக்கூறு" எனும் பணித்தாளை மாணவர் பெற்றுக்கொள்வர். முதலில் ஒரு சிறிய வகுப்பறை கலந்துரையாடலிலும், பின்னர் தனியாகவும் பல்விதக் குழுக்களில் தாம் எக்குழுவுடன் தொடர்புள்ளவர் என்று சிந்தனை செய்வர்.
- நடுவிலுள்ள வட்டத்தினுள் தங்கள் பெயர்களை எழுதிய பின் தாங்கள் எந்தக் குழுவுடன் இணைக்கப்பட்டுள்ளார்கள் என உணர்கின்றனரோ அந்த வேறுபாடான குழுக்கள் பெயர்களைச் சுற்றியுள்ள வட்டங்களில் எழுதுவர். (குடும்பம், பள்ளி, ஓய்வு நேரம், பிறந்த நாட்டு உறவினர், அரட்டைக் குழுக்கள், முகநூல் நண்பர்கள் முதலியவை)
- இரண்டாவது படிமுறையில், குழுத் தொடர்பாளர்களைக் கண்டுகொள்வதற்காக ஆசிரியர் "எழுந்துநிற்றல்" பயிற்சியை நடத்துவர், அவர் வரக்கூடிய வேறுபட்ட குழுக்களை அழைத்துக்கொள்வர். ("உதைபந்தாட்டக் குழு", "பிறந்த நாட்டில் உறவுகள்" முதலியவை.) இந்தக் குழுக்களை நிரல்பண்ணிய மாணவர் எழுந்துநின்று ஒரு சிறு உரை செய்யலாம். தொடர்ச்சியாக அழைக்கப்படாத ஆனால் பணித்தாளில் நிரற்படுத்தப்பட்ட வகைப்பாடுகள் கலந்துரையாடப்படும்.
- மூன்றாவது படிமுறையில் இரண்டு பேர் கொண்டு மாணவர் குழுக்களை உருவாக்குவர். (யாருடன் குறைவான தொடர்புகளைப் பேணுகின்றாரோ அவருடன் இணையாகச் சேரல் விரும்பத்தக்கது.) எந்தக் குழுக்கள் இணைப்புக்கள் தங்கள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன, எந்தவகையான வேறுபட்ட ஆட்கள், தனியாள், அரசியல், சமூக நிகழ்வுகள் (குடும்பம், ஓய்வுநேரம், தேசியப் பண்பாடும் பாரம்பரியங்களும்) அவர்களது பண்புகளை உருவமைப்புச் செய்தன என்பதை ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடும். இந்தக் குழுவின் அங்கத்துவராக இருப்பதில் உள்ள குறிப்பான கருத்தும் இன்றியமையாமையும் என்ன? இக்குழுவில் அங்கத்தவராக இருப்பது எவ்வளவு எளிது அல்லது கடினம்? இணையர்களாக கலந்துரையாட வேண்டிய தூண்டிகள் பற்றி முன்னரே விளக்கியிருக்க வேண்டும்.
- இச்செயற்பாட்டை முடிவுறுத்துவதற்கு முழு வகுப்பும் செய்யக்கூடியவை: அதற்கான பரிந்துரைகள்
  - – இரண்டு பேர்கொண்ட குழுவில் எவ்வகையான முக்கிய கருத்துக்களை நீங்கள் விவாதித்தீர்கள்?
  - – மாணவர் ஏதாவது புதிதாக அல்லது தங்களைப் பற்றி வியப்புடன் ஒன்றைக் கண்டுபிடித்தார்களா?
  - – எழுந்துநில் பயிற்சியில் அல்லது இணையர்களின் கலந்துரையாடலில் மாணவர்கள் தம்மைப்பற்றி புதிதாக அல்லது வியப்பான ஒன்றை (குறிப்பிட்ட பால் அல்லது குறிப்பிட்ட அகவைக்கான நடத்தை) தெரிந்துகொண்டார்களா?
  - – எநத குழு இணைப்புகள் சிக்கலானதாகவும் வலிதரத் தக்கதாகவும் இருந்தன?

1